# FORUM OF BSNL UNIONS AND ASSOCIATIONS
# தமிழ்மாநிலம்

தேதி:-16.12.2015

## FORUM முடிவுகள்

அன்பார்ந்த தோழர்களே,

தமிழ் மாநில FORUMத்தின் கூட்டம் சென்னையில் 15.12.2015 அன்று நடைபெற்றது. NFTEயின் பொருப்பு மாநில செயலாளர் தோழர் சென்னகேசவன் தலைமையில் நடைபெற்ற அந்தக் கூட்டத்தில் BSNLEU, NFTE BSNL, SNEA, AIBSNLEA மற்றும் AIBSNLOA தலைவர்கள் பங்கு பெற்றனர். அந்தக் கூட்டத்தில் BSNL ஊழியர் சங்கத்தின் மாநில செயலாளர் தோழர் A.பாபுராதாகிருஷ்ணன் கூட்டத்தின் நோக்கம் பற்றி எடுத்துரைத்தார். அதன் பின்னர் நடைபெற்ற விவாதங்களின் அடிப்படையில் கீழ்கண்ட முடிவுகள் ஏகமனதாக மேற்கொள்ளப்பட்டன.

- பணியில் இருக்கும் ஊழியர்களுக்கு 78.2% பஞ்சப்படி இணைப்பு வழங்கப்பட்டு 2½ ஆண்டுகள் கழிந்த பின்னரும் ஓய்வூதியதாரர்களுக்கு வழங்கப்படவில்லை. DOT செயலாளர் உள்ளிட்ட உயர்மட்ட அதிகாரிகளிடம் பலமுறை விவாதித்த பின்னரும் தீர்வு காணப்படவில்லை. எனவே 10.12.2015 அன்று கூடிய அகில இந்திய FORUM கூட்டத்தில் 22.12.2015 அன்று அகில இந்திய அளவில் ஆர்ப்பாட்டம் நடத்துவது என முடிவு செய்யப் பட்டுள்ளது. அதனை தமிழகத்தில் மிகச் சிறப்பாக நடத்த மாவட்ட FORUMகள் திட்டமிட வேண்டும். அன்று மதியம் அனைத்து மாவட்ட தலைநகர்களிலும் சக்தியான ஆர்ப்பாட்டம் நடத்திட வேண்டும் என இந்தக் கூட்டம் கேட்டுக் கொண்டுள்ளது.
- "SERVICE WITH SMILE"-100 நாட்கள் திட்டம்:- 10.12.2015 அன்று கூடிய அகில இந்திய FORUM கூட்டத்தில் "SERVICE WITH SMILE" என்ற பெயரில் 100 நாட்கள் திட்டம் ஒன்றை முடிவு செய்துள்ளது. அந்த 100 நாட்கள் திட்டத்தின் நோக்கங்கள்:-
  1. மொபைல், லேண்ட்லைன் மற்றும் ப்ராட்பேண்ட் இணைப்புகளை அதிகப் படுத்துவது.
  2. பழுதற்ற சேவையை உறுதிப் படுத்துவது.
  3. துண்டிக்கப் பட்ட லேண்ட்லைன் மற்றும் ப்ராட் பேண்ட் இணைப்புகளை மீண்டும் பெறுவது.
  4. MNPக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பது

  இந்த "SERVICE WITH SMILE" 100 நாட்கள் திட்டத்தை வெற்றிகரமாக்கும் பொருட்டு மாவட்ட மட்டங்களில் FORUM கூட்டங்களை உடனடியாக நடத்திட வேண்டும். இந்த திட்டத்தை விரிவாக விளக்கி மாநில FORUM சார்பாக ஒரு சுற்றறிக்கை வெளியிடுவது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

  ஓய்வூதியதாரர்களின் நியாயமான கோரிக்கைகளை போராடி வென்றடைவது என்பது நிரந்தர ஊழியர்களின் கடமை என்பதால் 22.12.2015 ஆர்ப்பாட்டத்தை வெற்றிகரமாக்குவோம்.

  நமது வாழ்வும் வளமும் BSNL என்பதை மனதில் கொண்டு நமது சேவைகளை முன்னெடுத்து செல்வோம்.

  வாழ்த்துக்களுடன்,

**(A.BABU RADHAKRISHNAN)** CONVENOR, FORUM & CS BSNLEU

**(R.PATTABI RAMAN)** PRESIDENT, FORUM& CS NFTE BSNL

**(R.RAJASEKAR)** CS SNEA

**(S.SIVAKUMAR)** CS AIBSNLEA

**(M.S.RADHAKRISHNAN)** CS AIBSNLOA